**கவனிக்க.**- *24.11.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2048 - 2017 නොවැම්බර් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.11.30

*2048 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2180* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2191* |


**கவனிக்க.**- *பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் 2017, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2177- B81230 - 5,403 (2017/11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

சட்ட அலுவலர் (நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த II ஆவது தரம்)
பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் சட்ட அலுவலர் பதவிக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01

1. **ஆட்சேர்க்கும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் நடாத்தப்படும் தகுதிகளை மதிப்பீடு செய்கின்ற நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்களைக் கொண்டு வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட (06 ஆவது இலக்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கிணங்க கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

2. **தேவைப்படும் தகைமைகள்** :

* ***கல்வி/தொழில்சார் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டம் தொடர்பிலான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

* ***அனுபவம்.***- சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் சட்டத்தரணி ஒருவராக 3 ஆண்டுகளுக்குக் குறையாத முனைப்பான தொழில்சார் அனுபவம். (ஏதேனுமொரு அமைச்சில், அரச திணைக்களத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் சட்டத்தரணி ஒருவராகப் பதவிநிலைப் பதவியொன்றில் அல்லது சட்ட நிலைமையிலான அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது சட்டக் கல்லூரியில் சட்டம் தொடர்பிலான ஆசிரியர் ஒருவராக அல்லது இலங்கை நீதித்துறைச் சேவையில் ஈடுபட்டுள்ள ஓர் அலுவலராக அல்லது தொழில் நியாய சபையில் தவிசாளர் ஒருவராக சேவையாற்றிய காலகட்டமும், முனைப்பாக சட்டத்தரணித் தொழிலில் ஈடுபட்டிருந்த காலமாகக் கருதப்படும்.)

* ***உடல்சார் தகைமைகள்.***- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

* ***ஏனையவை :***

(அ) இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த நடத்தையைக் கொண்டவராயிருத்தல் வேண்டும் ;

(இ) ஏதேனுமொரு சமயப் பிரிவில் துறவறம் பூண்டுள்ள எவரும் இதற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறமாட்டார் ;

(ஈ) *தகைமை பெறுகின்ற திகதி.*- பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது, விண்ணப்பதாரர் தேவைப்படும் தகைமைகளை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்திருந்தால் மட்டுமேயாகும். தகைமைகளை உறுதி செய்வதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**3. சேவையில் ஈடுபடச் செய்யும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

* இப்பதவி நிரந்தரமானதாகும். உங்களுக்குரிய ஓய்வூதிய முறை பற்றி அரசாங்கத்தினால் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

* நியமனம் 3 ஆண்டு நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டதாயிருக்கும். சட்ட அலுவலர் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளினுள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

* பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின்படி ஏற்புடைய மட்டத்திலான மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

* அரச கரும மொழியொன்று அல்லாததொரு மொழியின் மூலம் சேவையில் இணைந்துள்ள ஒரு அலுவலர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும்.

* சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழியை ஒரு பாடமாக சித்தியடைந்து திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். (விருப்பத் தெரிவுப் பாடம் ஒன்றாகவல்ல).

* ஒவ்வொரு நியமனம் தொடர்பிலும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் வெளியிடப்பட்டுள்ள செயல் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

* மேற்படி நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறு தேவைப்படும் தேர்ச்சிகள் மற்றும் திறன்களை அனைத்து அலுவலர்களும் உரியவாறு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணையின்படி இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615 - 1,335 X 10 - 1,630 X 08 - 2,170 X 17 - ரூபா 1,10,895 (SL-I-2006) ஆகும். மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே உங்களுக்கான சம்பளம் செலுத்தப்படும்.

6. தகுதியை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளிகள் வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதானமான தலைப்புகள் | அதிகபட்ச புள்ளிகள் | தெரிவுசெய்வதற்காக கவனத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | |
| 2. மேலதிக தொழில்சார் தகைமைகள் | 15 | |
| 3. மேலதிக அனுபவம் (தொழில்சார் தகைமைகளின் கீழ் சட்டத்தரணி யாகத் தேவைப்படுகின்ற குறைந்த பட்ச 3 ஆண்டு சேவைக் காலத்திற்கு மேலதிகமாக) | 30 (ஓர் ஆண்டுக்கு 5 புள்ளிகள்) | அதிகபட்ச புள்ளிகளின்படி மற்றும் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக் கைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும். |
| 4. ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 | |
| 5. தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு | 15 | |
| 6. நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

7. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

* தகுதியை மதிப்பீடு செய்கின்றபோது, அனைத்து விதத்திலும் முழுமையான விண்ணப்பப்பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

* நேர்முகப் பரீட்சையின்போது அனைத்துச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளும் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

* நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

  (i) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
  (ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் :**

(அ) விண்ணப்பப்பத்திரங்கள் 2017.12.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும் :

செயலாளர்,
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,
"சொபாதம் பியச",
இல. 416/சீ/1, ரொபட் குணவர்தன மாவத்தை,
பத்தரமுல்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்பத்திரத்தின் மாதிரிப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பப்பத்திரங்களை ஏ4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதலாவது பக்கத்தில் இலக்கம் 1 தொடக்கம் 8 வரையிலும் இரண்டாவது பக்கத்தில் இலக்கம் 9 தொடக்கம் 13 வரையிலும் மூன்றாவது பக்கத்தில் இலக்கம் 14 தொடக்கம் 15.2 வரையிலும் இருக்கக்கூடியவாறு தயாரித்து தமது கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்பத்திரம் இடப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் சட்ட அலுவலர் பதவிக்காக விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் பொறுப்புரிமை வழங்கப்பட்ட அலுவலர் அல்லது ரூபா 47,615 மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தர பதவியொன்றை வகிக்கின்ற அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப்பத்திரங்களைத் தாம் சேவையாற்றுகின்ற திணைக்களத்தின் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இத்துடனுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திசைவாயில்லாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப் படும். விண்ணப்பப்பத்திரங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பிலான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்.-** நீங்கள் அனுப்பியுள்ள விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் உண்மைக்குப் புறம்பானதென்பது அல்லது தவறானதென்பது ஆட்சேர்ப்புக்கு முன்னர் வெளிப்படுத்தப்படுமிடத்து உங்களது விண்ணப்பதாரர் தன்மை இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்பின் பின்னர் வெளிப்படுத்தப்படுமிடத்து அதற்கு ஏற்புடையவாறான நடவடிக்கைகளுக்கு உட்பட்டவாறு பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*10.* வெற்றிடங்களை நிரப்புகின்ற அல்லது நிரப்பாதிருக்கின்ற உரிமை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரைச் சார்ந்ததாகும்.

அனுர திசாநாயக்க,
செயலாளர்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் வெற்றிடமாகியுள்ள சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு**

(அலுவலக பயன்பாட்டுக்கு)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) :
   தமிழில் :----.
   ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.
   - 1.1 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) திரு./திருமதி/செல்வி :
     தமிழில் :----.
     ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.
2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
3. பிறந்த திகதி :
   ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
   - 3.1 விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :
     வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
4. பால் (ஆண்/ பெண்) :
   ஆண்-M, பெண்-F
   (பொருத்தமான எழுத்தைக் கூட்டில் இடுக.)
5. விவாகமானவர்/ விவாகமாகாதவர் :----.
6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்தில்) :----.
7. தொலைபேசி இலக்கம் :
   நிலையான :----.
   செல்லிட :----.
8. சட்டம் தொடர்பிலான பட்டம் பற்றிய விபரங்கள் :
   - (i) பல்கலைக்கழகம் :----.
   - (ii) பட்டம் அளிக்கப்பட்ட திகதி :----.
9. உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.
10. சட்டத்தரணியாக முனைப்பான அனுபவம் (ஆண்டுகளின் எண்ணிக்கை) :----.
11. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 6 ஆவது பந்திக்கமைய தகைமைகள் :
    - (i) :----.
    - (ii) :----.
    - (iii) :----.
    - (iv) :----.
    - (v) :----.
12. நீங்கள் எப்போதாவது ஏதாவதொரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றத்தில் தவறாளியாக்கப்பட்டிருக்கின்றீர்களா ?
    ஆம்/ இல்லை.

13. விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

(அ) இவ்விண்ணப்பப்பத்திரத்தில் நான் வழங்கியுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவையும் சரியானவையும் என அறிவிக்கின்றேன்.

(ஆ) என்னால் அறிவிக்கப்பட்டுள்ள இக்கூற்று உண்மைக்குப் புறம்பானதென்பது நிரூபிக்கப்படுமிடத்து பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு நிரூபிக்கப்படுமிடத்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உள்ளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்ற ......................................... என்பவரை நான் தனிப்பட்ட விதத்தில் அறிவேன் என்பதையும் இவர் ................................ ஆந் திகதி எனது முன்னிலையில் மேலேயுள்ள 13 ஆவது பந்தியின்கீழ் கையொப்பமிட்டார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையைக் கொண்டு உறுதிப்படுத்துக.)

15. திணைக்களத் தலைவரின் விதப்புரை (அரச/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்) :

15.1 அலுவலரின் பெயர்வழிப் பதிவுக்கோப்பின் பிரகாரம், விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அண்மித்த 05 ஆண்டுகளினுள் வேலை, நடத்தை, வருகை திருப்திகரமாக உள்ளது/ திருப்திகரமாயில்லை.

அனைத்து சம்பள ஏற்றங்களையும் ஈட்டியுள்ளார்/ஈட்டவில்லை.

எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகவில்லை/உள்ளாகியுள்ளார்.

15.2 விண்ணப்பித்துள்ள பதவிக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து தற்போதைய பதவியிலிருந்து இந்த அலுவலரை விடுவிக்க முடியும்/முடியாது. விண்ணப்பப்பத்திரம் விதந்துரைக்கப்படுகிறது/விதந்துரைக்கப்படவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

11-1479

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

### சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் வகுதியின் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சில் சட்ட அலுவலர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகளின் எண்ணிக்கை - 01

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை.**- அறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அபேட்சகர்கள் இப்பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (06 ஆம் இலக்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்ட) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கமைய தகுதிகள் குறித்து மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவைப்படும் தகைமைகள் :**

(i) ***கல்வி வாழ்க்கைத் தொழிற்கல்வித் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் தொடர்பிலான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ;

(ii) ***அனுபவம்.***- உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் மூன்றாண்டுகளுக்கு (03) குறையாத முனைப்புமிகு தொழில்சார் அனுபவமொன்றைப் பெற்றிருத்தல் ;

(iii) ***உடற்றகைமைகள்.***- அபேட்சகர்கள் அனைவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவர்களாக இருத்தல் ;

(iv) ***பிற தகைமைகள் :***

* இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
* ஏதேனும் மத சிந்தனைப் பிரிவொன்றின் துறவுநிலை பூண்டவரான எவரும் இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதிபெற மாட்டார்கள் ;
* 2017.12.15 ஆந் திகதிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமாகின்றவாறான தகுதிகளை எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். இப்பதவி, ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு அமைவானதாக இருக்க வேண்டும் ;

(ii) இந்நியமனம் மூன்றாண்டுகள் (03) கொண்ட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்றாண்டு காலத்துள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட விதமாக முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/ 2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கும் அதனோடு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கும் அமைய, இந்நியமனத்தை ஏற்ற திகதியிலிருந்து 05 ஆண்டுகள் கழிய முன்பு, ஏற்புடையவாறு அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டுள்ளதை தாங்கள் நிரூபிக்க வேண்டும் ;

(iv) இந்நியமனம் தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள் மற்றும் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கு ஏலவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் அமைவானதாக இருத்தல் வேண்டும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.

6. தகுதிகள் குறித்து மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :

| விடயம் | உச்சமட்ட புள்ளிகள் |
|---|---|
| (1) ***கல்வித் தகைமைகள் :*** | 20 |
| அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சட்டம் தொடர்பிலான பட்டம் | |
| - முதலாம் வகுப்பு சித்தியொன்றுக்கு | 20 |
| - இரண்டாம் வகுப்பு உயர் சித்தியொன்றுக்கு | 15 |
| - இரண்டாம் வகுப்பு கீழ்மட்ட சித்தியொன்றுக்கு | 10 |
| சட்டக் கல்லூரியில் இறுதியாண்டின் முதலாம் வகுப்பு சித்தியொன்றுக்கு | 15 |
| சட்டக் கல்லூரியின் இறுதியாண்டின் இரண்டாம் வகுப்பு சித்தியொன்றுக்கு | 10 |
| (ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். பட்டம் அல்லது சட்டக் கல்லூரியின் தகைமைகளில் ஒன்றுக்கு மட்டும்.) | |
| (2) ***மேலதிக தொழில் தகைமைகள் :*** | 15 |
| அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தொடர்பிலான துறையில் ஓராண்டுக்குக் குறையாதவொரு பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கைநெறி அல்லது பட்டப்பின் படிப்பு சட்ட டிப்ளோமாவுக்கு (கற்கைநெறி ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம்) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தொடர்பிலான துறையில் 06 மாத காலத்திற்குக் குறையாதவொரு டிப்ளோமா கற்கைநெறிக்கு (கற்கைநெறி ஒன்றுக்கு 03 புள்ளிகள் வீதம்) | |
| அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தொடர்பிலான துறையில் 03 மாத காலத்திற்குக்கு குறையாதவொரு டிப்ளோமா கற்கைநெறிக்கு (கற்கைநெறி ஒன்றுக்கு 02 புள்ளிகள் வீதம்) | |
| (3) ***மேலதிக அனுபவம் :*** | 30 |
| வன சீவராசிகள் விடயப் பரப்பு தொடர்பாக அரச துறையில் பெற்றுக்கொண்ட அனுபவம் - ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 30 புள்ளிகள் | |
| (4) ***ஆங்கில மொழித் தேர்ச்சி :*** | 15 |
| அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஆங்கில மொழிக் கற்கைநெறிக்காக- | |
| - 03 மாதங்களுக்கு மேற்பட்ட | 15 |
| - 03 மாதங்களுக்குக் குறைந்த | 10 |

| *விடயம்* | *உச்சமட்ட புள்ளிகள்* |
|---|---|
| (5) ***தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய அறிவு :*** | 15 |
| அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய கற்கைநெறிக்காக- | |
| - 03 மாதங்களுக்கு மேற்பட்ட | 15 |
| - 03 மாதங்களுக்குக் குறைந்த | 10 |
| (6) ***நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை :*** | 05 |
| முழு மொத்தம் | 100 |

7. **அபேட்சகர்களின் ஆளடையாளம்**.- எல்லா வகையிலும் பூர்த்தியான விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்த அபேட்சகர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையில் எல்லாச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் உரிய முறையில் சான்றுப்படுத்திய பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு கீழ்க்காணும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முறை :**

(i) விண்ணப்பங்கள் 2017.12.15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

> செயலாளர்,
> வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு,
> 09 ஆவது மாடி,
> முதல் கட்டம்,
> "செத்சிறிபாய",
> பத்தரமுல்ல.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவங்களின் மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களை ஏ4 அளவுடைய கடதாசியிலே முதல் பக்கத்தில் 01-05 வரையும், 2 ஆவது பக்கத்தில் 06-09 வரையும், 3 ஆவது பக்கத்தில் 10-12 வரையும் அமையக்கூடியவாறு தயாரித்து தங்களது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும் ;

(iii) விண்ணப்பப்படிவங்களைக் கொண்ட கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பகிரங்க நொத்தாரிசு/ முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர்/பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கும் அதிகாரி அல்லது ரூபா 22,935 இற்கு அதிகமான மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரச நிரந்தர பதவி ஒன்றினை வகிக்கும் அலுவலர் ஒருவர் அத்தாட்சிப்படுத்தியிருத்தல் வேண்டும் ;

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் அலுவலர்கள் தங்களது விண்ணப்பங்களைத் தாங்கள் பணியாற்றும் திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(vi) இதனுடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதமடைந்தமை தொடர்பான எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்**.- தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான, தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்த பின்னர் தெரியவருமிடத்து உரிய நடவடிக்கைகளின்கீழ் சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியதிகளுக்கிணங்க,

ஆர். எம். டீ. பி. மீகஸ்முல்ல,
செயலாளர்,
வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு,
“செத்சிறிபாய”, 1 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு**

சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - 2017

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

| | |
|---|---|
| நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : | |

(சிங்களம்-2/ தமிழ்-3/ஆங்கிலம்-4)
(உரிய ஆங்கில எழுத்தைக் கூட்டினுள் எழுதுக)

1. (i) இறுதியில் வரும் பெயரை முதலில் குறிப்பிட்டு அடுத்ததாக முதலெழுத்துக்களைக் குறிப்பிடுக (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

உ-ம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களம்/ தமிழ் மொழியில்) :----.

(iv) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (சிங்களம்/ தமிழ் மொழியில்) :----.

2. (i) முழு முகவரி :

நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ii) நிரந்தர வதிவிட முகவரி (சிங்களம்/ தமிழி மொழியில்) :----.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கும் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iv) தொலைபேசி இலக்கம் :----.

3. பால் :
பெண் - 1
ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. திருமணமானவரா/ திருமணமாகாதவரா என்பது :
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

5. (i) பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2017.12.15 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

7. நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு, விண்ணப்ப அழைப்பு அறிவிப்பின்படி பெற்றுள்ள தகைமைகள் தொடர்பான விபரம் :

| தகைமை | பெற்றுக்கொண்டுள்ள நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|---|
| .......................................... | .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... | .......................................... |

8. உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

9. விண்ணப்ப அழைப்பு அறிவிப்பின்படி 6 ஆம் இலக்கத்தின் கீழான ஒவ்வொரு தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிய தகவல்கள் :

| | தகைமை | பெற்றுக்கொண்டுள்ள நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|---|---|
| (1) மேலதிக கல்வித் தகைமைகள் : | | | |
| (i) | ........................................ | ........................................ | ........................................ |
| (ii) | ........................................ | ........................................ | ........................................ |
| (iii) | ........................................ | ........................................ | ........................................ |
| (2) மேலதிக தொழில்சார் தகைமைகள் : | | | |
| (i) | ........................................ | ........................................ | ........................................ |
| (ii) | ........................................ | ........................................ | ........................................ |
| (iii) | ........................................ | ........................................ | ........................................ |
| (3) மேலதிக அனுபவம் : | | | |
| (i) | ........................................ | ........................................ | ........................................ |
| (ii) | ........................................ | ........................................ | ........................................ |
| (iii) | ........................................ | ........................................ | ........................................ |

| தகைமை | பெற்றுக்கொண்டுள்ள நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|---|

*(4)* ஆங்கில மொழித் தேர்ச்சி :

| | | | |
|---|---|---|---|
| (i) | ........................................ | ........................................ | ........................................ |
| (ii) | ........................................ | ........................................ | ........................................ |
| (iii) | ........................................ | ........................................ | ........................................ |

(5) தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய அறிவு :

| | | | |
|---|---|---|---|
| (i) | ........................................ | ........................................ | ........................................ |
| (ii) | ........................................ | ........................................ | ........................................ |
| (iii) | ........................................ | ........................................ | ........................................ |

10. விண்ணப்பதாரரின் கையொப்பம் :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும், சரியானது எனவும் இத்தால் உறுதிப்படுத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அமுல்படுத்தப்படுகின்ற அனைத்து ஏற்பாடுகளுக்கும் நான் கட்டுப்படுவதாகவும் இத்துடன் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

12. திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

மேலே விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ............................................ அவர்கள் இத்திணைக்களத்தில் சேவையாற்றுபவர் எனவும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையெனவும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/ தாபனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

(பதவி முத்திரை இடப்பட வேண்டும்.)

11-1420

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரத திணைக்களம்

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் பிரிவு 2 சேவை தரத்தின் புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் இயந்திரம் மற்றும் புகையிரத தொழில்நுட்ப உதவியாளர் மின் பதவிகளின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2017

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு பயிற்சிக் காலத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

* புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் இயந்திரம் - வெற்றிடம் 154.

* புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் மின் - வெற்றிடம் 43.

2. புகையிரத பொது முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி நிலவும் வெற்றிடத்தைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகள் தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி போட்டிப் பரீட்சையிலும் தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்ற புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

3. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

4. **ஆட்சேர்ப்பு நிபந்தனை**.- முதலில் ஒரு வருட கால பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்து அப்பயிற்சியைத் திருப்திகரமாக நிறைவு செய்யும் சேவையாளர்கள் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

***பயிற்சிக் காலத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :***

***கல்வித் தகைமைகள்.***- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இரு விடயங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) விடயங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

கல்விப் பொதுத்தராதர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் சகல விடயங்களிலும் (பொது அறிவு விடயம் தவிர்ந்த) சித்தியடைந்து மூன்றாம் நிலைக் கல்வி பாடநெறியைக் கற்பதற்குத் தேவையான தகைமையைப் பெற்றிருத்தல். பழைய விடய உள்ளடக்கத்தின்கீழ் மூன்று விடயங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

2017.06.25 ஆந் திகதி வரையில் இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி நெறிக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மாத்திரம் குறித்த பயிற்சி நெறியை திருப்திகரமான முறையில் நிறைவு செய்ததன் பின்பு வழங்கப்படும் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருப்பின் மேலுள்ள கல்வித் தகைமை கருத்திற்கொள்ளாமல் விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.

*தொழில் தகைமை.*-இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் பதவிக்குரிய கீழ்க்குறிப்பிடப்படும் பிரிவில் 2 1/2 வருடத்திற்குக் குறையாத முழுநேர தொழில்நுட்பப் பாடநெறியைக் கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

டீசல் என்ஜின் இயந்திரவியலாளர் :

பொருத்துனர் பாடநெறி
மின்னியலாளர் (சக்தி) பாடநெறி
இயந்திரவியலாளர் (பொது) பாடநெறி

5. **சம்பள அளவுத்திட்டம்**.- III ஆம் வகுப்பு - பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன்கீழ் MT-02-2016 ரூபா 30,140 - 10 x 350 - 11 x 370 - 10 x 560 - 10 x 660 - ரூபா 49,910.

*பயிற்சிக் கால எல்லை :*

மாதாந்தக் கொடுப்பனவு : 2018.01.01 - 2018.12.31 வரை
மாதாந்தக் கொடுப்பனவு : ரூபா 20,462
ஒப்பீட்டுக் கொடுப்பனவு : ரூபா 4,629.

6. **ஆட்சேர்ப்பு முறை**.- பயிற்சிக் காலத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் எழுத்துமூலப் பரீட்சை சிங்களம், தமிழ் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

விண்ணப்பதாரி பரீட்சையின்போது ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும்.

பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாகப் புகையிரத பொது முகாமையாளரினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரி உட்பட்டவராகும். அச்சட்ட திட்டங்களை மீறுகின்றபோது புகையிரத பொது முகாமையாளரினால் இடப்படும் தண்டனைகளுக்கு உட்பட நேரிடும்.

* *பயிற்சிக் காலத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் எழுத்துமூலப் பரீட்சையின் விடயங்கள்.-* பரீட்சை இரு கேள்வித்தாள்களைக் கொண்டிருக்கும் :

| தொடர் இல. | விடயம் | காலம் | உச்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கான குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 01 | பொது அறிவும் நுண்ணறிவும் | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | தொழில்நுட்ப விடயம் | 2 மணித்தியாலம் | 100 | 40 |

*விடய உள்ளடக்கம் :*

(1) ***பொது அறிவும் நுண்ணறிவும்.***- விண்ணப்பதாரி வசிக்கும் மற்றும் சேவை புரியும் சூழல் உட்பட இலங்கை சமூக, பொருளாதார, கலாச்சாரம், அரசியல் பற்றிய அறிவு தேசிய சர்வதேச வகையில் முக்கியமான நவீன விடயங்கள் மற்றும் வரலாற்று விடயம், விஞ்ஞான, பௌதீக, தொழில்நுட்ப அபிவிருத்தி போன்றவை சம்பந்தமாக விண்ணப்பதாரி கொண்டுள்ள அறிவையும் தர்க்க ரீதியாக விளக்கமளிக்கும் ஆற்றல், நிகழ்வுகள் பற்றி சரியான தீர்மானம் எடுக்கும் திறன், பொது அறிவு மற்றும் புத்திக் கூர்மையை அளவிடும் வகையில் நோக்காகக் கொண்டு கணித குளறுபாடு, பொது அறிவு மற்றும் சூழல் சம்பந்தமான கேள்விகளைக் கொண்டமைந்த எழுத்துமூலப் பரீட்சையாகும்.

(2) ***தொழில்நுட்ப விடயம்.***- பதவிக்கு ஏற்ப தெரிந்திருக்க வேண்டிய அடிப்படை தொழில்நுட்ப கோட்பாட்டு அறிவை அளவிடும் வகையில் அமைந்த கேள்விகளைக் கொண்டதாகும்.

* *பயிற்சிக் காலத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறனை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை.-* எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி நிலவும் வெற்றிடத்தைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகள் தொகையினர் புள்ளிகள் வழங்கும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி எழுத்துமூலப் பரீட்சையினதும் நேர்முகப் பரீட்சையினதும் புள்ளிகள் கூட்டப்பட்டு அதன் திறமையின் வரிசைப்படி விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிட தொகைக்குச் சமமான தொகையினர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர் :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமை<br>கற்றுள்ள ஆங்கிலம்/தமிழ் மொழி, கணினி மற்றும் வேறு பாடநெறிகள் | 20 |
| 2. மேலதிக தொழில் தகைமைகள்<br>பதவிக்குரிய கற்றுள்ள வேறு தொழில் பாடநெறி (6 மாதம் மற்றும் 6 மாதத்திற்குக் கூடிய பாடநெறிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்) | 30 |

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|
| 3. பதவிக்கு ஏற்ப பெற்றுள்ள அனுபவம் (ஒரு வருடத்திற்கு 6 புள்ளிகள் விகிதம் உச்சளவு 5 வருடங்கள் கருத்திற் கொள்ளப்படும்.) | 30 |
| 4. விசேட/ வெளிவாரி தகுதிகள் (விளையாட்டு/ சமூக சேவை போன்றவை | 15 |
| 5. நேர்முகப் பரீட்சையின்போது காட்டும் மனப்பாங்கு, ஆளுமைத் தன்மை | 05 |
| மொத்தம் | 100 |

***பயிற்சிக் காலத்தின் பின்பு III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.***- பயிற்சிக் காலத்திற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிற்சியாளர்கள் பயிற்சி இறுதியின் பின்பு எழுத்துமூல மற்றும் தொழில் பரீட்சைக்கு உட்படுத்தி சித்தி பெற்றவர்கள் III ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படுவர். முதல் தடவை பயிற்சி இறுதிப் பரீட்சையில் சித்தி பெறாதவர்களுக்கு பின்பு நடாத்தப்படும் பயிற்சி இறுதிப் பரீட்சை இரண்டிற்கு தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அதிலும் சித்தி பெறாதவர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

***பயிற்சிக் காலத்தின் பின்பு III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ளும் எழுத்துமூலப் பரீட்சையின் விடயங்கள் :***

ஒரு கேள்வித்தாளை மாத்திரம் கொண்டிருக்கும் :

| இல. | விடயம் | காலம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான புள்ளி |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப விடயம் | 2 மணித்தியாலம் | 100 | 40 |

*விடய உள்ளடக்கம் : தொழில்நுட்ப விடயம்.*- பதவிக்குரிய தொழில்நுட்ப விடயம் சம்பந்தமான அறிவை அளவிடும் வகையில் அமைந்த கேள்வித்தாளாகும்.

பயிற்சிக் காலத்தின் பின்பு III ஆம் வகுப்புக்கு சேர்த்துக்கொள்ளும் தொழில் பரீட்சை :

| இல. | விடயம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான புள்ளி |
|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப விடயம் | 100 | 60 |

*விடய உள்ளடக்கம் : தொழில்நுட்ப விடயம்.*- தேர்ந்தெடுக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக நிபுணத்துவம் மற்றும் பதவிக்குரிய கோட்பாட்டு அறிவைப் பிரயோகமாக மற்றும் சரியான முறையில் பயன்படுத்துகின்றாரா என அளவிடும் வகையில் பிரயோக பரிசோதனை நடாத்தப்படும்.

**7. சேவை நிபந்தனை**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். (ஓய்வூதிய திட்டம் சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான திட்டங்களுக்கு உட்பட வேண்டும்.).

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பகுதியிலேனும் கடமை புரிய உட்பட வேண்டும்.

சேவை ஒப்பந்தம் சம்பந்தமான விபரம்.- பயிற்சிக் காலத்திற்காக சேர்க்கப்பட்ட III ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படும் சேவையாளர்கள் III ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 வருட காலம் கட்டாயமாக புகையிரத திணைக்களத்தில் சேவை புரிதல் வேண்டும். அவ்வாறு 10 வருட சேவைக்கு முன்பு விலகாமலிருப்பதாகவும், அதற்கு முன்பு சேவையிலிருந்து விலகும்போது புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும் தொகையை திணைக்களத்திற்குச் செலுத்துவதற்கு இணங்குவதாக அரச சேவையாளர் பிணை முறி மூலம் இணங்க வேண்டும்.

III ஆம் வகுப்புக்குச் சேர்ந்து 3 வருட காலத்தைத் தாண்டுவதற்கு முன்பு முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

அரச கரும மொழி அல்லாத மொழியில் சேவைக்குச் சேர்ந்தவர்கள் குறித்த அரச கரும மொழித் தேர்ச்சியைத் தகுதிகாண் காலவெல்லைக்குள் பெறல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அரச சேவையின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இலக்கம் PSC/EST/04-01-43/09/2016-2017.06.16 ஆந் திகதியையுடைய இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு - 2 சேவைப் பிரிவிற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும், அவ்வாட்சேர்ப்புத் திட்டத்திற்கு செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 1589/ 30-2009.02.20 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு நியதிகளுக்கும் திணைக்கள சட்ட திட்டங்களுக்கும் உட்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் குறித்த வைத்தியப் பரிசோதனைக்கு மேலதிகமாக புகையிரத திணைக்கள உபதேச ஏட்டின்படி விசேட கண் பார்வை பரிசோதனையிலும் தகுதியுடையவராகக் காணப்பட வேண்டும்.

8. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப்பப்பத்திரத்தைப் பூரணப்படுத்தும்போது மிகவும் கவனமாகவும் சரியான தகவல்களையும் வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களின்படி எவரேனும் விண்ணப்பதாரி தகுதியற்றவரெனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சை நடக்கும்போது அல்லது பரீட்சையின் பின்பு அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அவரின் போட்டியிடுகையை இரத்துச் செய்ய முடியுமாகும். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் எச்சந்தர்ப்பத்திலும் பொய்யானதென தெரியவருமிடத்து அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியுமாகும். விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படல் அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதி பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 750 ஆகும். இத்தொகையை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்திற்கு முன்பு புகையிரத பொது முகாமையாளரின் மக்கள் வங்கியின் நகர மத்திய கிளைக் கணக்கு இலக்கம் 176-100129027-313 வரவிடும் வகையில் எந்த மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்து முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழன்று விடாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை எதிர்கால பிரயோசனத்திற்காகத் தம்மிடம் வைத்துக்கொள்ளவும்) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள செலுத்தப்படாததுடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக இருக்க வேண்டியதுடன் அது கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ4 அளவுள்ள கடதாசியில் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 இலிருந்து 2.12 வரை முதலாம் பக்கத்திலும், 3.0 இலிருந்து 5.0 வரை அதன் மறு பக்கத்திலும் மிகுதமானவை மூன்றாம் பக்கத்திலும் அமையும் வகையில் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரிப்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். இதற்காக வேண்டி கணினி மூலம் மற்றும் தட்டச்சு மூலம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்த முடியும். விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள தகவல்களை தமது கையெழுத்து மூலமே பூரணப்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத பூரணமற்ற வகையில் உள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக்கூடியதாக இருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாவென்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீசைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் மொழி மூலமே விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த வேண்டியதுடன், விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும்,தமிழில் தயாரிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக சரியான முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2017.12.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக "இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு - 02 சேவைப் பிரிவுக்கான புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான திறந்த பயிற்சிக் காலத்திற்காக

தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் போட்டிப் பரீட்சை – 2017" எனக் குறிப்பிடவும். மற்றும் ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் கற்ற பாடநெறி மற்றும் வருடம் குறிப்பிடப்படல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது :

புகையிரத பொது முகாமையாளர்,
இலங்கைப் புகையிரதத் திணைக்களம்,
நியமனக் கிளை,
த. பெ. இல. 355,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை அதிபர்/ ஓய்வுபெற்ற அதிகாரி, பிரிவின் கிராம சேவை உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடத்திற்கு ரூபா 2,40,360 இற்குக் குறையாத ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) சகல வழிகளிலும் பூரணமற்ற விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். தபாலிடும்போது விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதித்தல் போன்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு புகையிரத திணைக்கள வெப் தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்களுக்கு பின்பும், அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பொது முகாமையாளர் அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்றவற்றைக் குறிப்பிட வேண்டும். கொழும்புக்கு வெளியில் உள்ள விண்ணப்பதாரர்களாயின் தமது விபரத்துடன் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியை அனுப்புவதற்காக வேண்டி விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் மூலம் புகையிரதத் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுடையதாக இருக்கும். மேலும் புகையிரத திணைக்களத்தினால் கேட்கப்படும் தேவையான தகவல்களை உறுதிசெய்வதற்காக வேண்டி விண்ணப்பதாரியினால் தம்மிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்பத்திரத்தின் பிரதியை பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும் விண்ணப்பப்பத்திரத்தை தபாலிடும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் தயாராக வைத்துக்கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(எ) எந்த விண்ணப்பதாரிக்கும் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதிபெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

11. விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி பரீட்சை மேற்பார்வையாளரிடம் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றை முன்வைத்தல் வேண்டும் :

* ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது சம்பந்தமாக புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்டதிட்டங்களின்படி செயற்பட வேண்டும். இதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் பொருந்தாத தன்மை நிலவுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எஸ். எம். அபேவிக்ரம,
புகையிரத முகாமையாளர்.

2017, நவெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பிரயோகத்திற்காக)

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் பிரிவு - 2 சேவைப் பிரிவிற்கான புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான பயிற்சிக் காலத்திற்காக தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Open Competitive Examination for Recruitment of trainees of Railway Management Assistants (Technical) for Railway Management Assistant (Technical) Service Category - Section 02 in Sri Lanka Railway Department - 2017

1. மொழி மூலம் :
   பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
   சிங்களம் - 2
   தமிழ் - 3
   ஆங்கிலம் - 4
   (குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்.)

   விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தல் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாகும்.

2. தனிப்பட்ட தகவல்கள் :

   2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (உதாரணம் : HEARATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

   2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.

   2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (அனுமதி அட்டை இம்முகவரிக்கு தபாலிடப்படும்.)

   2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.6 பால் (ஆண்/பெண்) :
   ஆண்-0
   பெண்-1
   (குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்.)

   2.7 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

   2.8 சிவில் தன்மை :
   தனியாள்-1
   திருமணமானவர்-2
   (குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்.)

   2.9 தேசிய இனம் : (சிங்களவர்-1, தமிழர்-2,
   இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, வேறு-5)
   (குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்.)

   2.10 பிறந்த திகதி :

   ஆண்டு : □□□□ மாதம் : □□ திகதி : □□

2.11 தகுதிபெறும் 2017.12.15 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

2.12 தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

3. தகைமைகள் :

3.1 கல்வித் தகைமைகள் (க. பொ. த. சாதாரண தரம்) :
வருடம் :----.
சுட்டெண் :----.

| இல. | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

கல்வித் தகைமைகள் (க. பொ. த. உயர் தரம்) :
வருடம் :----.
சுட்டெண் :----.

| இல. | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

3.2 ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் கற்ற பாடநெறி :
தொழில்நுட்ப பாடநெறியின் பெயர் :

பாடநெறியின் காலம் (வருடம்) : | |

................... இருந்து ..................... வரை

4. கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை ஒட்டவும் :

| |
|---|
| பணம் வைப்புச்செய்த பற்றுச்சீட்டின் (மூலப்பிரதி) கழன்றுவிடாதவாறு அதன் ஓர் ஓரத்தினை மட்டும் இங்கு ஒட்டவும் (பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை வைத்துக்கொள்ளவும்.) |

5. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவையெனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய ....................... ஆம் இலக்கம் .................................. திகதியை உடைய பணம் வைப்புப் பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். பரீட்சைச் சட்ட திட்டங்களுக்கு இணங்கிச் செயற்படுவதற்கும், இப்பரீட்சை சம்பந்தமான ஏற்பாடுகள் உள்ளடங்கிய சேவைத்திட்டத்தின்படி நான் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்பு அல்லது நடக்கும்போது அல்லது அதன் பின்பு எனது பரீட்சார்த்த தன்மை இரத்துச் செய்யப்படும் என்பதற்கும் நான் இணங்கிக்கொள்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக புகையிரதப் பொது முகாமையாளரினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கும் நான் கீழ்ப்படுவதாக தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் 10(ஈ) உள்ளவாறு) :

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் (முழுப்பெயர்) திரு. ........................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர் ......................................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(தயவுசெய்து உத்தியோக இலச்சினையை பொறிக்கவும்.)
திகதி :----.

திணைக்களப் பிரதானியின் உறுதிப்படுத்துகை :

(அரச/ மாகாண அரச/ அரச கூட்டுத்தாபனம் போன்றவற்றில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்) :

இவ்விண்ணப்பப்பத்திரத்தை முன்வைத்துள்ள திரு./ திருமதி/ செல்வி .......................................... அவர்கள் ............... .......................... திணைக்களத்தில்/ அமைச்சில்/ நிறுவனத்தில் ............................................. ஆக சேவை புரிவதுடன், அவரின் விண்ணப்பப்பத்திரத்தைச் சிபார்சு செய்து முன்வைக்கிறேன். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்நிறுவனத்திலிருந்து விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள முடியும்/ முடியாது.

----,
திணைக்கள/ நிறுவன பிரதானியின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(தயவுசெய்து உத்தியோக இலச்சினையை பொறிக்கவும்.)
திகதி :----.

*11-1218*

---

## நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சு

*நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் வதிவிடத் திட்ட முகாமையாளர் தரம் III இற்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017*

*நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சின் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் வதிவிடத் திட்ட முகாமையாளர் பதவி வெற்றிடங்கள் 9 இற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் தகுதிகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2018.01.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி "பணிப்பாளர், நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு, நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டிடம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07" எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் குறிப்பிடுகையில் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியினை தங்களுடன் வைத்திருத்தல் பிரயோசனமானவை எனவும் அறியத்தருகின்றேன். பரீட்சை கொழும்பு நகரில் இடம்பெறும். விண்ணப்பதாரிகளால் பரீட்சைக் கட்டணமாக 1,200 ரூபா பரீட்சை ஆணையாளரின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வண்ணம் தீவின் ஏதாவது தபால்/ உப தபால் அலுவலகத்தில் செலுத்திப்*

பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் விண்ணப்பப்படிவத்தினை உரிய இடத்தில் கழன்றுவிடாத வண்ணம் ஒட்டப்படல் வேண்டும். செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளச்செலுத்துதல் அல்லது வேறு பரீட்சைகளுக்காக மாற்றம் செய்யப்பட மாட்டாது என்பதுடன் பரீட்சைக் கட்டணமாக காசுக்கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- இப்பதவிக்கான தகுதிகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து திறந்த மட்டத்தில் 30% உம் மட்டுப்படுத்தப்பட்ட மட்டத்தில் 70% உம் சேர்த்துக்கொள்ளப்படும். இதற்காக எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை இடம்பெறும்.

(அ) ***திறந்த ஆட்சேர்ப்பு***.- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் III

(ஆ) ***தகுதி***.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம், பொருளாதார விஞ்ஞானம், பொறியியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், புவியியல் விஞ்ஞானம், அரச நிர்வாகம், வர்த்தகம், புள்ளிவிபரவியல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்குக் கூடிய எண்ணிக்கை உள்ளடங்கிய பட்டம் பெற்றிருத்தல் ;

(இ) ***சேர்த்துக்கொள்ளும் முறை***.- எழுத்துப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

2. **உடற்தகுதி**.- சகல பரீட்சார்த்திகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் தங்கியிருந்து சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(அ) ***வேறு தகுதிகள் :***

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
(2) விண்ணப்பதாரர்கள் நன்நடத்தையுள்ளவராக இருத்தல் ;
(3) பதவியில் சேர்த்துக்கொள்வதற்கு வேண்டிய சகல தகுதிகளையும் பூரணப்படுத்தியுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பம் கோரல், அறிவித்லில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் அத்தகைமைகளை சகல வழிகளிலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மன்னார், திருகோணமலை, அனுராதபுரம், புத்தளம், பொலன்னறுவை, அம்பாறை, குருணாகல், பதுளை, கண்டி, அம்பாந்தோட்டை, மொனராகலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் வதிவிடத்திட்ட முகாமைத்துவ அலுவலகங்களில் ஏதாவது ஒன்றில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதுடன் அரசின் தேவையைப் பொறுத்து இந்நிறுவனப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படும் வேறு மாவட்டங்களுக்கும் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

3. **வயது**.- 22 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 1995.05.30 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1982.05.30 ஆந் திகதியில் அல்லது அதன் பின்னர் பிறந்த தினத்தையுடையவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.)

4. **எழுத்துப் பரீட்சை**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரச சேவை ஆணைக்குழு அனுமதிக்கும் நிறுவனத்தின் மூலம் பரீட்சை இடம்பெறும்.

(அ) எழுத்துப் பரீட்சை, நுண்ணறிவு, கிரகித்தல் மற்றும் பொது வினாப்பத்திரமாக அமையும். பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

| விடயம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தி பெறுவதற்குத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. கிரகித்தல் | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. பொது அறிவுப் பரீட்சை | 3 மணித்தியாலம் | 100 | 40 |

(ஆ) *எழுத்துப் பரீட்சைக்கான விடய சிபாரிசு :*

| *வினாப்பத்திரம்* | *விடய சிபாரிசு* |
|---|---|
| 1. நுண்ணறிவு | விண்ணப்பதாரியின் தர்க்கவியல் பண்புகள், விடய ஆய்வு இயலுமைகள், தீர்மானம் எடுக்கும் சக்தி, தீர்வு செய்யும் வண்ணம் அமைந்திருக்கக்கூடிய கேள்விகளைக் கொண்டிருக்கும். இது பல்தரப்பட்ட சிறு விடைகள் வழங்கும் 50 கேள்விகளைக் கொண்டது. |
| 2. கிரகித்தல் | மொழித்திறன், ஏதாவது ஒரு பந்தியினை வாசித்து அதனை சரியாகப் புரிந்துகொள்ளும் இயலுமையைப் பரிசோதித்தல், நீண்ட பந்தியின் கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு சுருக்கமாகக் கூறுதல் போன்ற விண்ணப்பதாரியின் அறிவைப் பரிசோதித்தல், கேள்வி முழுவதற்கும் பதிலளித்தல். |
| 3. பொது அறிவுப் பரீட்சை | பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் விவசாய நடவடிக்கைகளைத் திட்டமிடல், திட்டங்களைத் தயாரித்தல், திட்ட முகாமைத்துவம், நீர்ப்பாசனச் சட்டதிட்டங்கள் மற்றும் இலங்கையின் நீர்ப்பாசனத்துடன் இணைந்ததான அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாகவும் நீர் மற்றும் விவசாயக் கொள்கைகள் சம்பந்தமான அறிவு என்பன பரிசீலிக்கப்படும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

(இ) சாதாரண நேர்முகப் பரீட்சை.- போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து வெற்றிட எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதில் விண்ணப்பதாரிகளின் அடிப்படைத் தகைமை, சான்றிதழ்கள், உடற்தகைமை என்பன பரிசோதிக்கப்படும். புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சைச் சபை அரச சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும்.

5. **விண்ணப்பம் கோரும் நடைமுறை**.- அரச வர்த்தமானி அறிவித்தல் அல்லது பகிரங்க செய்திப் பத்திரிகை அறிவித்தல் வெளியிடல் மற்றும் இணையத்தளம் மூலம் விண்ணப்பம் கோரப்படும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத்தின்கீழ், அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயது எல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன், சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்படும். பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட்டதன் பின்னர் இது சம்பந்தமாகக் குறிப்பிட்டு செய்திப் பத்திரிகையில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் விளம்பரம் செய்யப்படும். விளம்பரம் செய்யப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னர் தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டபடி அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்கள ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவுக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வசிப்பவர் எனில் அவ்விபரத்துடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியினை விரைவாகப் பெறக்கூடியவாறு விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தினை விளம்பரத்தில் குறிப்பிடப்படும் தொலைநகல் இலக்கத்திற்குச் சமர்ப்பிப்பதுடன் அது பற்றி விசாரித்தலும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்படும் ஏதாவது தகவலை உறுதி செய்து கொள்வதற்காக விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதி, விண்ணப்பப்படிவத்தைத் தபாலில் பதிவுசெய்த பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

6.1 விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை விநியோகித்தல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வேண்டிய தகுதிகளைக் கொண்டிருத்தலை ஏற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்திலாகும் என்பதைக் கருத்திற்கொள்ளவும்.

7. **ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. விண்ணப்பப்படிவத்தில், பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது தாபனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரைக் கொண்டும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை அரச பாடசாலையின் தலைவர், ஓய்வூதியம் பெறுபவர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளில் அதிகாரி தரத்தைச் சேர்ந்தவர், வருடாந்தம் 2,30,360 ரூபாவுக்கு மேல் திரட்டிய சம்பளம் பெறும் அரச, மாகாண அரச சேவையைச் சேர்ந்தவர்கள் அல்லது நிரந்தரப் பதவி நிலை தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமை மதகுரு அல்லது ஏனைய மதத்தலங்களுக்குப் பொறுப்பாக உள்ள அல்லது மதத் தலைவர்களில் உயர் தரத்தில் உள்ளவர்களைக் கொண்டு அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

8.1 பரீட்சையில் கலந்துகொள்ளும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. **சேவையில் ஈடுபடுத்தல் நிபந்தனைகளும், சேவை நிபந்தனைகளும் :**

(அ) இப்பதவி நிரந்தரமானதாகும், ஓய்வூதியமுடையதாகும், விதவைகள்/ அனாதைகள்/ தபுதாரர் ஓய்வூதியக் கொடுப்பனவுத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) இப்பதவி மூன்று வருடங்கள் (03) தகுதிகாண் காலத்திற்குட்பட்டது.

(இ) பொது நிர்வாக சுற்றுநிருபம் 01/ 2014 மற்றும் அதனுடன் இணைந்ததான மொழித் தேர்ச்சியினை உரிய காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்துடன் அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் சேர்ந்துகொண்ட உத்தியோகத்தர்களால் உரிய காலத்திற்குள் அரச கரும மொழித் தேர்ச்சியினைத் தகுதிகாண் கால எல்லைக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 ஆவதுடன், இச்சம்பளம் தங்களுக்கு 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் உரித்துடையதாகும். பொது நிர்வாக சுற்றுநிருபம் 3/2016 அட்டவணை II இன் விதிகளுக்கமைய நியமனம் செய்யப்படும் திகதி தொடக்கம் வேதனம் வழங்கப்படும்.

11.11.1 **பொதுவான நேர்முகப் பரீட்சை.**- எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு விடயத்திலும் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கிடையில் மொத்தப் புள்ளிகளின் திறமைக்கு அமைய வெற்றிடங்களுக்கு சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

11.2 **பரீட்சைப் பெறுபேறு**.- எழுத்துப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்ப் பட்டியல் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளருக்கு வழங்கப்படுவதுடன், பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறு தனிப்பட்ட முறையில் வழங்க அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

11.3 பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும். சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாகவேண்டி வரும்.

12. ஒவ்வொரு பதவி சம்பந்தமாகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செயற்பாடுகள் நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகள், தாபனக்கோவை நடைமுறை, நிதிப்பிரமாணங்கள் என்பனவும் உரித்துடையதாக இருக்கும்.

13. இவ் ஆட்சேர்ப்பு நடைமுறை, விதிகளுக்கு மாற்றமாக மேற்கொள்ளப்படும் விடயம் சம்பந்தமாக அரச சேவை ஆணைக்குழுவால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

14. சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலம் வெளியிடப்படும் அவ்விளம்பரங்களுக்கிடையில் ஏதாவது பொருத்தமின்மை, வித்தியாசங்கள் இருக்குமேயானால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான விளம்பரத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

15. பரீட்சை சிங்களம், தமிழ் மொழி மூலம் மட்டும் நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

சந்திகா வி. அதுகல,
பணிப்பாளர்,
நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு.

நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டிடம்,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07,
2017, நவெம்பர் 16.

மாதிரி விண்ணபப்பப்படிவம்

**நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் வதிவிடத் திட்ட முகாமையாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Open Competitive Examination - 2017 for Recruitment of Officers for the Post of "Resident Project Manager" of the Irrigation Management Division (IMD) of Ministry of Irrigation & Water Resources Management

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்-2 ☐
தமிழ்-3
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்.)

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) திரு./ திருமதி/ செல்வி :----.
(உதாரணம்- GUNAWARDHANA, H. M. S. K.

(ஆ) முதல் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) திரு./ திருமதி/ செல்வி :----.

(இ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) திரு./ திருமதி/ செல்வி :----.

2. (i) நிரந்தர விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4. பால் (ஆண்/ பெண்) :
(பெண்-1, ஆண்-0) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

5. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6. விண்ணப்ப இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7. விவாக நிலை :
திருமணமாகாதவர்-1
திருமணமானவர்-2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

8. (i) பெற்றுக்கொண்டுள்ள பட்டமும், வருடமும் :----.
(ii) சித்தியின் தன்மை- சாதாரணம்/ வகுப்பு I/ வகுப்பு II (கீழ்/ மேல்)
விசேடம்/ கௌரவம் வகுப்பு I/ வகுப்பு II (கீழ்/ மேல்)
(iii) உரித்தான பாடங்கள் :----.

9. பரீட்சைக் கட்டணம் :
(i) செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) செலுத்திய தொகை :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

பற்றுச்சீட்டின் ஒரு விளிம்பில் கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும்.
பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை உடன் வைத்திருத்தல் பயன்மிக்கது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் பிழையற்றதும் உண்மையானதும் எனவும் வெளிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்படும் தகவல்கள் உண்மையற்றது என பின்னர் தெரியவரும் வேளையில் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் எனவும் அறிவேன். மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற உரித்துள்ளது எனவும், இப்பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதற்கு எனது சம்மதத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் (திரு./ திருமதி/செல்வி) ..................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் எனவும், அவரால் எனது முன்னிலையில் ............................ ஆந் திகதி அவரின் கையொப்பமிடப்பட்டது எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அப்பற்றுச்சீட்டு ஒப்பமிடப்பட்டுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.
(தேவையற்ற வசனங்களை வெட்டிவிடவும்.)

11-1453

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.